*9*

# முடிவுக் குறிப்புகள்

## (5:12-14)

***[12]உங்களுக்குப் புத்திசொல்லும்படிக்கும், நீங்கள் நிலைகொண்டு நிற்கிற கிருபை தேவனுடைய மெய்யான கிருபைதானென்று சாட்சியிடும்படிக்கும், நான் சுருக்கமாய் உங்களுக்கு எழுதி, எனக்குத் தோன்றுகிறபடி உண்மையுள்ள சகோதரனாகிய சில்வானுவின் கையிலே கொடுத்து அனுப்பியிருக்கிறேன். [13]உங்களுடனேகூடத் தெரிந்துகொள்ளப்பட்டிருக்கிற பாபிலோனிலுள்ள சபையும், என் குமாரனாகிய மாற்கும் உங்களுக்கு வாழ்த்துதல் சொல்லுகிறார்கள் [14]ஒருவரையொருவர் அன்பின் முத்தத்தோடே வாழ்த்துதல் செய்யுங்கள். கிறிஸ்து இயேசுவுக்குள்ளான உங்கள் அனைவருக்கும் சமாதானமுண்டாவதாக. ஆமென்.***

***வசனம் 12.*** நிச்சயமாக இல்லாவிட்டாலும், இந்த **சில்வானு** என்பவர் நடபடிகள் புத்தகத்தில் கூறப்படும் சீலா என்பவராக இருந்திருக்க வாய்ப்பு உண்டு. பவுல் தமது நிருபங்களில் சீலாவின் பெயரைக் குறிப்பிடவில்லை, ஆனால் மூன்று இடங்களில் அவர் சில்வானு என்று குறிப்பிட்டார் (2 கொரிந்தியர் 1:19; 1 தெசலோனிக்கேயர் 1:1; 2 தெசலோனிக்கேயர் 1:1). இவர் நடபடிகள் புத்தகத்தில் விவரிக்கப்பட்ட அதே பயணத் துணைவர்தாம் என்பது நிச்சயம். "சீலா" என்ற வார்த்தையை NIV வேதாகம மொழிபெயர்ப்பாளர்கள் தரவழைத்தபோது, அவர்கள் அது ஒரே நபராக இருப்பதாக எடுத்துக் கொண்டனர்.[1] இந்தப் பெயரே இலத்தீன் பெயராக உள்ளது. ரோமப் புராணக்கதைகளில், "சில்வானு" என்பது வன முனையின் கடவுளாயிருந்தார். ரோம விவசாயிகள் நிலத்தைச் சுத்தம் செய்து வனத்தைப் பின் திருப்பி ஓட்டும்போது. சிலவேளைகளில் அவர்கள் அந்தக்கடவுளின் எல்லைப் பகுதியில் தாங்கள் அத்துமீறி நுழைந்ததற்காக அவருக்கு ஏற்பட்ட சினத்தைத் தணிப்போம் என்ற நம்பிக்கையில், தாங்கள் உழுத நிலத்தின் முனைப்பகுதியில் இந்தக் கடவுளைக் கனப்படுத்த ஒரு சிறு கோவிலைக் கட்டுவது உண்டு. ரோமர்கள், "டிரான்ஸில்வேனியா" என்று அழைக்கப்பட்ட ஒரு மாகாணத்தைக் கொண்டிருந்தனர், இது வனப்பகுதிக்கு அப்பால் இருந்த பகுதியாகும். பவுலின் பயணத்துணைவரான சீலாதான் இந்த "சில்வானு" என்றிருக்கிறது என்றால், ஒரு நல்ல யூதருக்கு ரோமக்கடவுளின் இந்தப் பெயர் அவரது பெற்றோரால் தரப்பட்டதாயிருக்கும் (நடபடிகள் 15:32) என்பது ஆர்வத்திற்குரிய விஷயமாக உள்ளது. இருப்பினும் இப்படிப்பட்ட விஷயம் தேவதூஷணமல்ல என்பதை நவீனப் பழக்க வழக்கங்கள் விவரிக்கின்றன. ஒரு தாய் தனது பெண்குழந்தைக்கு டயானா என்று பெயரிடுகையில், அவள் அதே பெயரைக் கொண்டுள்ள ரோமப்

பெண்தெய்வத்தின் மீது ஆர்வமாக இருக்கக் சாத்தியக் கூறு இல்லை. அப்படி ஒரு பெண்தெய்வம் இருந்ததை அவள் அறியாதுகூட இருக்கலாம். நவீனகாலத் தாயினால் டயானா என்ற பெயர் சூட்டப்படுவது போன்றே, "சில்வானு" என்பதும் இந்தத் தீர்க்கதரிசியின் யூதத் தாயினால், அறியாமையில் சூட்டப்பட்ட பெயராக இருக்கலாம். "சில்வானு" என்பது யூதப்பெண்ணை மணம் செய்திருந்த யூதனல்லாத தந்தையால் கொடுக்கப்பட்ட பெயராக இருக்கக் கூடும். இந்த தீர்க்கதரிசியின் தாய் ஒரு யூதப் பெண்ணாக இருந்திருந்தால், இவரும் ஒரு யூதராகவே இருந்திருப்பார். "சில்வானு" ரோமக்கடவுளின் பெயரைக் கொண்டிருப்பதால் இவர் நடபடிகள் புத்தகத்தில் வரும் சீலா தவிர வேறொருவர் என்று யூகிக்கக் காரணம் எதுவும் இல்லை.

சில்வானுதான் இந்த நிருபத்தை எடுத்துச் சென்றவர் என்பதை *dia* என்ற முன்னிடைச் சொல் அர்த்தப்படுத்துகிறது என்று வேய்ன் A. க்ரூடெம் அவர்கள் பலமாகக் குறிப்பிட்டார். பழங்கால எழுத்தாளர்கள், கடிதம் ஒன்றை எடுத்துச் செல்பவர்களைக் குறிப்பிட இவ்வார்த்தையைப் பயன்படுத்திய பல நிகழ்வுகளை அவர் குறிப்பிட்டுக் காட்டினார்.[2] அவரது சாட்சியத்தை ஒதுக்கித் தள்ளுதல் சிரமமாக உள்ளது. இருப்பினும், இந்த நிருபத்தின் மிக உயர்வான கிரேக்க எழுத்துப்பாணி பற்றிய விபரத்திற்குக் கணக்கு ஒப்புவிக்க வேண்டிய அவசியத்தில் ஒருவர் விடப்படுகிறார். சிறிதளவே முறையான கல்வியறிவு பெற்றிருக்கக்கூடிய பின்வனப்பகுதியின் மீனவராகப் பேதுரு இருந்தார் என்ற விஷயத்தைக் காணாது விடுதல் தவறாக உள்ளது என்று குரூடெம் அவர்கள் விவாதித்தார்.[3] ஆனால் ஒருவேளை, இந்த நிருபத்தில் இருந்து 2 பேதுரு நிருபம், எழுத்து நடையில் கணிசமான அளவுக்கு வேறுபட்டுள்ளது எனலாம். இவ்விரு நிருபங்களையும் பேதுரு தாமே எழுதினாரா? மற்றும், பேதுருவும் அவரது மீன்பிடித் தொழில் கூட்டாளிகளும் கணிசமான அளவுக்கு வழிமுறைகள் கொண்டிருக்கையில், அவர் நிருபங்கள் எழுதுதலைக் கற்றுத் தேர்ந்தவர்கள் என்று அது விவாதிப்பதில்லை. நடபடிகள் 4:13ம் வசனம், அவர்கள் அவ்வாறு இருந்ததில்லை என்று கருத்துத் தெரிவிக்கிறது. பேதுரு கூறியவற்றை சில் வானு எழுதியிராவிட்டால், வேறு யாரேனும் எழுதியிருப்பார் என்பது உறுதி. "சில்வானு" இந்த நிருபத்தை [பேதுரு கூற] எழுதியவராகவும் அதைக் கொண்டு சென்றவராகவும் இருந்தார் என்று கருத்து தெரிவித்தல் கராணமற்றதாக உள்ளது என்று கூறுவது மிகவும் அரிதாகும்.

அப்போஸ்தலர் இந்த நிருபத்தைத் தாம் எழுதியது ஏன் என்ற நோக்கத்தை அடையாளப்படுத்துகிறார். அவர்களிடத்தில் அவர், **உங்களுக்குப் புத்திசொல்லும்படிக்கும், நீங்கள் நிலைகொண்டு நிற்கிற கிருபை தேவனுடைய மெய்யான கிருபைதானென்று சாட்சியிடும்படிக்கும், நான் சுருக்கமாய் உங்களுக்கு எழுதி**னேன் என்று கூறினார். புத்திசெல்லுதல் என்பது ஒரு செயல் ஓட்டத்தில் யாரேனும் ஒருவரைத் தொடர்ந்து உறுதியாக நிலைத்து இருக்கும்படி வேண்டிக்கேட்டுக்கொள்ளுதலாக உள்ளது. பேதுருவின் புத்திமதிகள் இந்த நிருபம் முழுவதிலும் காணப்பட முடியும். அவர்கள் பரிசுத்தமாக இருக்கும்படி (1:14, 15), கீழ்ப்படிந்திருக்கும்படி (2:13, 18; 3:1; 5:5), தாழ்மையாக இருக்கும்படி (5:6) அவர் புத்திசொன்னார், மற்றும் விசுவாசம் தொடர்பான பல நெறிமுறைகளையும் நடக்கைகளையும்கூட அவர் கூறினார்.

**"சாட்சியிடும்படிக்கு"** என்ற இரண்டாவது சொற்றொடர்

குறிப்பான ஆர்வத்திற்கு உரியதாக உள்ளது. இது 5:1ல் **"சாட்சியும்"** என்று மொழிபெயர்க்கப்பட்ட அதே வார்த்தைக் குடும்பத்தின் பகுதியான *epimartureō* என்ற கூட்டு வார்த்தையின் மொழிபெயர்ப்பாக உள்ளது. சாட்சிகள் சாட்சிகூறக் கூடியவர்களாக இருக்கின்றனர். ஒருவேளை இவ்வார்த்தையைப் பேதுரு தேர்ந்தெடுத்தது, கர்த்தருடன் அவர் இருந்திருந்தார் என்பதால், தாம் அவரைக் குறித்துத் தனிப்பட்ட, கண்ணால் கண்ட சாட்சியத்தை அளிக்க முடியும் என்று தமது வாசகர்களுக்கு மறைமுகமாக உணர்த்துவதற்காக இருந்திருக்கலாம். 5:1ல் மட்டுமின்றி 2:23, 24லும்கூட, பேதுரு தாம் கர்த்தருடன் இருந்திருந்தார் மற்றும் அவர் போதித்தவற்றைக் கேட்டும் அவர் மரித்ததைக் கண்டும் இருந்தார் என்று பேதுரு தம் வாசகர்களுக்குக் கூற முடிந்தது. மேலும், அதற்கும் மேலாக அவர் மரித்தோரில் இருந்து உயிர்த்தெழுந்தமையின் வல்லமைக்குப் பேதுருவே சாட்சியாயிருந்தார். சகோதரர் என்ற முறையில் மாத்திரமல்ல, ஆனால் சாட்சி என்ற முறையிலும் பேதுரு தமது வாசகர்களுக்கு, **"நீங்கள் நிலைகொண்டு நிற்கிற கிருபை தேவனுடய மெய்யான கிருபைதானென்று"** கூற முடிந்தது. நாசரேத்தூர் இயேசுவுக்குள் தேவன், தமது கிருபையின் சகல ஐசுவரியங்களையும் வெளிப்படுத்தியுள்ளார். பாவம் செய்ததை மாத்திரமே தங்கள் பகுதியில் கொண்டிருந்த மக்களுக்கு அவர் தமது இறவாத அன்பைச் செயல்விளக்கப்படுத்தினார். இயேசுவுக்குள், தேவன் மன்னிப்பையும் நித்திய ஜீவனுக்கான நம்பிக்கையையும் பாதுகாத்து வைத்தது மட்டுமின்றி, தமது மக்கள் நல்ல மனநிறைவான வாழ்வை வாழ வழியையும் காண்பித்துள்ளார். அவரில் நம்பிக்கை கொள்வோருக்கு, அவர் தற்காலத்தில் "ஏற்கனவே" தமது இராஜ்யத்தின் ஐசுவரியங்களைக் கொடுத்துள்ளார் மற்றும் "இன்னும் வெளிப்படுத்தப்படாத" நித்திய மகிமையை விசுவாசிகளுக்கென்று அவர் பாதுகாத்து வைத்துள்ளார்.

அப்போஸ்தலர் தமது வாசகர்களுக்கு நிறைவான புத்திமதி ஒன்றையும் கூடுதலாகக் கொடுத்தார்: **நீங்கள் நிலைகொண்டு** [**நில்லுங்கள்**]. கிறிஸ்தவர்கள் **"தேவனுடைய மெய்யான கிருபை"** யில் நிலை கொண்டு நிற்க வேண்டும் என்று பேதுரு வேண்டிக்கேட்டுக்கொண்டார். புறதெய்வ வணக்கத்தாரிடம் இருந்து வருகிற சோதனைகள், சக விசுவாசிகளின் நடக்கையினால் ஏற்படும் ஏமாற்றங்கள் மற்றும் விசுவாசிகளுக்குள்ளாகவே இருக்கக் கூடிய பாவத்தின் கவர்ச்சி ஆகியவை அவர்களை அமைதலின்றி அலையச் செய்யக்கூடும், அவ்வாறே செய்கின்றன. பாவத்தை எதிர்த்து நிற்பதிலும் கிறிஸ்துவுக்குள் "நிலைகொண்டு" நிற்பதிலும் கிறிஸ்தவர்கள் தங்கள் சுயவிருப்பத் துணிவாற்றலைச் செயல்படுத்த வேண்டும். ஞானஸ்நானத்தில் கிறிஸ்துவைத் தரித்துக்கொண்டு, ஜீவனில் சந்தோஷம் மற்றும் நம்பிக்கையில் பங்கேற்று, பின்பு ஆர்வமின்மை அல்லது உற்சாகக்குலைவு ஏற்பட்டதால், தாங்கள் தப்பி வந்திருந்த வழிக்கே திரும்பிச் சென்ற ஆத்துமாக்கள் ஏராளமாக உள்ளன (2 பேதுரு 2:20).

**வசனம் 13.** மறைபொருள் கொண்ட சொற்றொடருடன் பேதுரு இந்த நிருபத்தை முடித்தார். இவ்வசனம் "பாபிலோனில் உள்ள "The" உங்களை வாழ்த்துகிறான்" [The in Babylon greets you] என்று நேரடியாக

மொழிபெயர்க்கப்படுகிறது. கிரேக்க மொழியில் "The" என்ற வார்த்தை பெண்மைப் பெயர்ச்சொல்லுக்கு முன்னால் குறிப்பிடப்படுகிறது. சில சந்தர்ப்பப் பொருள்களில் இது "பாபிலானில் உள்ள பெண்" என்று அர்த்தப்பட்டு இருக்கலாம், ஆனால் இப்படிப்பட்ட ஒரு சொல்விளக்கத்தைக் கொண்டு, பேதுருவின் வாசகர்கள் எளிதில் அடையாளம் கண்டுகொள்ளக் கூடிய அளவுக்கு நன்கு அறியப்பட்ட யாரோ ஒரு பெண், பேதுருவுடன் இருந்திருக்கச் சாத்தியக்கூறு இல்லை. "சபை" என்பதற்கான (*ekklesia* என்ற) கிரேக்கப் பெயர் பெண்மைப் பெயர்ச்சொல்லாகும், மற்றும் பவுல், சபையைக் கிறிஸ்துவின் மணவாட்டி அல்லது மனைவி என்று குறிப்பிட்டார். புதிய ஏற்பாட்டு மாணவர்களின் பெரும்பான்மையானவர்கள், பேதுரு பாபிலோனில் இருந்த சபையையே இவ்விடத்தில் குறிப்பிட்டார் என்று நம்புகின்றனர். இருப்பினும் NASB வேதாகமம், **she who is in Babylon** என்று மொழிபெயர்ப்பதன் மூலம், ஆங்கில வாசகர்களுக்கு இன்னொரு விளக்கத்திற்கான சாத்தியக்கூறை விட்டுச் செல்ல முயற்சிக்கிறது. KJV வேதாகம மொழிபெயர்ப்பாளர்கள் இந்தச் சொற்றொடரை "The church that is at Babylon" என்று தரவழைத்தபோது, "church that is" என்ற வார்த்தைகள் கிரேக்க மொழியில் இல்லை என்பதைக் குறிக்க அவற்றைச் சாய்வெழுத்துக்களில் இட்டபோதிலும், மிகுந்த தைரியமாகவே மேற்கண்ட சொற்றொடரைத் தரவழைத்தனர். NRSV வேதாகமத்தில் "Your sister church in Babylon" என்றுள்ளது.

பேதுரு தாம் இருந்த நகரில் சபையில் இருந்து வாழ்த்துதல்களை அனுப்பி இருக்கச் சாத்தியம் உள்ளது. இதைக் கூறியுள்ள நிலையில், "பாபிலோன்" என்பதன் மூலம் அவர் எதை அர்த்தப்படுத்தினார் என்பதை இன்னமும் வாசகர்களே முடிவுசெய்தாக வேண்டும். பொதுவாக ஒரு வார்த்தையானது அதன் அடிப்படை மதிப்பில் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும். இந்தப் பெயரானது "எருசலேம்" என்பது அந்தப் பெயர்கொண்ட நகரத்தைக் குறிப்பதுபோன்றே, பாபிலோன் என்ற நகரை குறிப்பிடும் என்று நாம் எதிர்பார்க்கலாம். இருப்பினும் சிலவேளைகளில் வார்த்தைகள் உருவகமாகப் பயன்படுத்தப்படுகின்றன - அவைகள் நேரடி அர்த்தத்திற்கு அப்பால் தாங்கள் கொண்டுள்ள தனிக்குறிப்பை உணர்த்துகின்றன. ஒரு வார்த்தை உருவகக் கூற்றாகவா அல்லது நேரடியாகவா, எப்படி பயன்படுத்தப்பட்டுள்ளது என்பதைச் சந்தர்ப்பப்பொருளே தீர்மானிக்க வேண்டும். "பாபிலோன்" என்பதை ரோமாபுரிக்கு ஒரு உருவகச் சொல்லாகப் பேதுரு பயன்படுத்தினார் என்று கருத்துத் தெரிவிக்க நல்ல காரணங்கள் உள்ளன.

உருவகக் கூற்றைப் பேதுரு பயன்படுத்தினார் என்று நாம் முடிவு செய்தால், "ரோமாபுரியை 'பாபிலோன்' என்று குறிப்பிடும்போது அவர் ரோமாபுரியைப் பற்றி என்ன கூறமுனைந்தார்?" என்று நாம் கேட்டாக வேண்டும். பழைய ஏற்பாட்டின் பாபிலோனை நன்கு அறிந்துள்ள எவருக்கும், அந்தப் பெயரானது, தேவனுடைய மக்களின் அழிவு, தேவனுடைய ஆலயத்தின் அழிவு மற்றும் தேவனுடைய நகரத்தின் அழிவு ஆகியவற்றை அர்த்தப்படுத்துவதாக இருக்கும். பாபிலோனின் தரிசு நிலத்தில் இருந்த வேளையில், எருசலேமுக்கு நிகழ்ந்தவற்றைப் பற்றிய யூதர்களின் மனச்கசப்பானது, **"பாபிலோன் குமாரத்தியே, பாழாய்ப்போகிறவளே, நீ எங்களுக்குச் செய்தபடி உனக்குப்**

**பதில் செய்கிறவன் பாக்கியவான். உன் குழந்தைகளைப் பிடித்து, கல்லின்மேல் மோதியடிக்கிறவன் பாக்கியவான்"** என்று சங்கீதக்காரர் எழுதியபோது உச்சத்திற்குக் கொண்டுபோகப்பட்டது (சங்கீதம் 137:8, 9). "பாபிலோனை" போன்றே ரோமாபுரியைப் பற்றியும் பேதுரு, தேவனுடைய மக்களின் பேரழிவிற்கான ஆதாரமூலமாக நினைத்திருப்பார் என்பது உறுதி.

ரோமாபுரியை "பாபிலோனுடன்" அடையாளப்படுத்தும் விதத்திற்கு வரலாற்றுப் பூர்வமான இரண்டு கேள்விகள் உள்ளன. முதலாவது, பேதுருவின் வாசகர்களால் அனுபவிக்கப்பட்ட சோதனைகள் மற்றும் பாடுகள் ஆகியவற்றில் ரோம அதிகாரிகள் ஏதாவது ஒரு வகையில் ஈடுபட்டிருந்தனரா? 60களின் மத்தியகாலத்தில் பேதுரு இந்த நிருபத்தை எழுதியபோது, பேரரசர் தமது பேரரசு முழுவதிற்கும் கிறிஸ்தவத்திற்கு எதிரான ஆணையைப் பிறப்பித்திருக்கச் சாத்தியக்கூறு இல்லாது இருக்கையில், மாகாணங்களின் இருந்த ரோம அதிகாரிகள் விசுவாசிகளின் வாழ்வைப் பரிதாபத்திற்கு உரியதாக ஆக்குவதற்கு, உள்ளூர் சார்ந்த வகையில் முயற்சிகள் மேற்கொள்வதில் பங்கேற்றல் மற்றும் அவற்றை அங்கீகரித்தல் ஆகியவற்றைச் செய்திருப்பார்கள் என்பது யோசனைக்கு அப்பாற்பட்டு இருப்பதில்லை. நவீன படிப்புகள் அனுமதிக்கச் சாயும் அளவுக்கு மேலாகவே, பேதுரு நிருபத்தின் முதல் வாசகர்களால் அனுபவிக்கப்பட்ட பாடுகளுக்கு ரோம அலுவலகம் அதிக பங்களித்திருக்கும்.

ரோமாபுரி "பாபிலோனுடன்" அடையாளப்படுத்தப்படுவதால் எழும்பும் இரண்டாவது கேள்வி, ரோம அதிகாரத்தின் தொடர்பாக விசுவாசிகள் தங்களை எவ்வாறு காணச்சாய்ந்தனர் என்பது பற்றி அக்கறை கொண்டுள்ளது. ரோமர்கள் பேரரசை ஆட்சி செய்த வழி பற்றி அவர்கள் என்ன நினைத்தனர்? அது கனிவான ஏற்றுக்கொள்ளுதலாக இருந்ததா அல்லது ரோம அரசை தேவபக்தி இல்லாமை மற்றும் உணர்ச்சிப்பெருக்கான பொல்லாங்கு செய்தல் ஆகியவற்றின் ஆதாரமூலமாகக் கண்ணோக்கும் நிலை அவர்களின் அடிமனங்களில் நிலவியதா? பழைய ஏற்பாட்டில் "பாபிலோன்" என்பது தேவனுடைய மக்களை அழிப்பதாக மாத்திரமல்ல, ஆனால் அந்த நகரமே உணர்ச்சியால் செய்யப்படும் பாவங்கள் மற்றும் விக்கிரக ஆராதனை ஆகியவற்றிற்கு அடையாளமாகவும் இருந்தது. கிறிஸ்தவர்கள் ரோமாபுரியைப் பற்றி மங்கலான கண்ணோட்டம் கொண்டிருந்தால், மற்றும் அவர்களின் கண்ணோட்டமானது, இந்தப் புதிய மார்க்கத்தைப் பழித்துரைத்தவர்கள் மத்தியில் பரவலாக அறிப்பட்டிருந்தால் அது, ரோமாபுரிக்கு இந்த புதிய மார்க்கத்தை அடக்கி ஒடுக்குவதற்கான காரணியாக இருந்திருக்கச் சாத்தியக்கூறு உள்ளது.

அரசாங்க அதிகாரிகளுக்கு விசுவாசிகள் கீழ்ப்படிய வேண்டும் என்று வேண்டிக்கேட்டுக்கொள்ளும் 2:13-17 உடன் இணைத்துப் பார்க்கும்போது, இவையாவும் குறிப்பாக ஆர்வத்திற்கு உரியதாக இருக்கின்றன. 5:13ன் "பாபிலோன்" என்பது **"மனுஷருடைய கட்டளைகள் யாவற்றிற்கும்"** (2:13) என்ற பரப்பெல்லைக்குள் விழுகிறது, இவை இரண்டும் மிகச்சரியாக சமானப்படுத்தப்படாது இருந்தாலும் இது இவ்வாறே விழுகிறது. பேதுரு, **"நீங்கள் பாபிலோனுக்குக் கர்த்தர் நிமித்தம் கீழ்ப்படியுங்கள்"** என்று கூறியிருந்தால் என்னவாகி இருக்கும்? ரோமாபுரியைப் பேதுரு "பாபிலோன்"

என்று அழைத்தபோது அவர், கிறிஸ்தவ விசுவாசம் மற்றும் கிறிஸ்தவ உயர்கொள்கைகள் ஆகியவற்றின் மீது பேரரசின் தாக்கம் பற்றித் தமது வாசகர்களுடன் ஒரு எதிர்மறை முடிவை வெளிப்படுத்தினார். மற்றும் இந்த எதிர்மறை முடிவானது. ரோம உலகில் கிறிஸ்தவ விசுவாசம் பரவத்தொடங்கிய தொடக்க நாட்களிலேயேகூட அதற்கு ரோமாபுரியின் பதில் செயலுக்கான ஒரு காரணியாக இருந்திருக்கச் சாத்தியக்கூறு உள்ளது.

பேதுரு தமது இந்த நிருபத்தின் வாசகர்களை, **"தெரிந்துகொள்ளப்பட்ட [பரதேசிகளுக்கு]"** என்று அழைத்து இதை எழுதத் தொடங்கினார். இங்கு முடிவுப் பகுதியிலும்கூட அதே வார்த்தை ஏற்புடையதாக உள்ளது. பாபிலோனில் இருந்த சபையானது அவர்களுடனே கூட **தெரிந்துகொள்ளப்பட்ட**தாக இருந்தது. பவுலைப் போலவே பேதுருவும், முன்பு இஸ்ரவேல் மக்களினத்திற்கு குறிப்பிடப்பட்ட சொற்றொடரை தேவனுடைய புதிய இஸ்ரவேலருக்கு நடைமுறைப்படுத்தினார். உலகம் முழுவதிலும் உள்ள சகோதகர்களின் சகோதரத்துவமானது சாத்தியப்படும் போதெல்லாம் ஒருவர் மற்றவருக்கு **வாழ்த்துக்களை** அனுப்புகின்றனர். உலகத்தில் தேவன் மகிமைப்படுத்தப்படும்படிக்கு விசுவாசிகள் கொண்டுள்ள பொதுவான நோக்கத்தினால், மொழி மற்றும் மக்களின் எல்லை ஆகிய தடைகள் மூழ்கடிக்கப்படுகின்றன.

பேதுருவுடன் இருந்த சகோதரர்களில் **மாற்கும்** "வாழ்த்துதல்" கூறினார் என்று அவரை மாத்திரம் தனிப்படக் குறிப்பிடப்படுதல் ஆர்வத்திற்கு உரியதாக உள்ளது. "மாற்கு" என்பது பொதுவான ரோமாபுரிப் பெயராக இருக்கையில், இந்தப் பெயர்கொண்ட சுவிசேஷத்தை எழுதியவர் இவர்தாம் என்பதில் சிறிதளவே சந்தேகம் உள்ளது. தொடக்க நாட்களில் எருசலேமில் இருந்த கிறிஸ்தவர்கள் மாற்குவின் தாயான மரியாளின் வீட்டில் முறையாகக் கூடிவந்தனர் (நடபடிகள் 12:12). பவுலின் முதல் சுவிசேஷப் பயணத்தில் மாற்குவும் அவரது இனத்தாரான பர்னபாவும் (கொலோசெயர் 4:10) பவுலுடன் கூடப் பயணம் சென்றனர், ஆனால் அப்பயணம் முடியும் முன்னரே அவர் [மாற்கு] திரும்பிச் சென்று விட்டார் (நடபடிகள் 13:13). பவுல் மற்றும் பேதுரு ஆகிய இருவரின் மரணத்திற்கும் முன்பு ஒரு சில ஆண்டுகள், அவர்கள் இருவருக்குமே மாற்கு உதவி செய்திருந்தார் என்பதைக் காண்பது ஆர்வத்திற்கு உரிய விஷயமாக உள்ளது (2 தீமோத்தேயு 4:11). இவரைப் பேதுரு மிகவும் பிரியத்துடன் **என் குமாரனாகிய மாற்கு** என்று குறிப்பிட்டார்.

**வசனம் 14.** இயேசுவினால் கூறப்பட்ட "நீங்கள் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாயிருந்தால், அதினால் நீங்கள் என்னுடைய சீஷர்களென்று எல்லாரும் அறிந்துகொள்வார்கள்" (யோவான் 13:35) என்ற வார்த்தைகளைப் பற்றிக் கிறிஸ்தவ சமூகத்தினர் உணர்வுள்ளவர்களாக இருந்தனர். அவர்களைச் சுற்றிலும் இருந்த புறதெய்வ வணக்கக் கூட்டத்தவர்கள், விசுவாசிகள் ஒருவர் மற்றவர் மீது காண்பிக்கும் ஆதரவு மற்றும் பிரியம் ஆகியவற்றினால் மனம் ஈர்க்கப்பட்டனர். பேதுரு, **ஒருவரையொருவர் அன்பின் முத்தத்தோடே வாழ்த்துதல் செய்யுங்கள் என்று** கூறி தமது நிருபத்தை முடித்தார். பவுல் சில வேளைகளில் தமது நிருபத்தை இதேபோல வாழ்த்துக்களுடன் முடித்தார் (ரோமர் 16:16; 1 கொரிந்தியர் 16:20; 2 கொரிந்தியர் 13:12; 1 தெசலோனிக்கேயர் 5:26).

இந்தப் பழங்காலப் பதிவேடுகளின் வார்த்தைகள், தங்கள் மூல வரலாற்று மற்றும் இலக்கியக் காட்சி அமைவில் அர்த்தப்படுத்தியது என்ன என்பதை மாத்திரமின்றி, நூற்றாண்டுகளுக்குப் பாலம் இட்டு இவ்வார்த்தைகள் நவீன வாழ்விற்கு நடைமுறைப்படுத்துவது என்ன என்பதையும், நவீன வாசகர்களுக்கு வேதவசனங்களின் விளக்கம் எடுத்துரைக்க வேண்டியதாக உள்ளது. பேதுருவும் பவுலும் தங்கள் வாசகர்களுக்கு "ஒருவரையொருவர் அன்பின் முத்தத்தோடே வாழ்த்துதல் செய்யுங்கள்" என்று கட்டளை இட்டனர். இது "நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள்" (நடபடிகள் 2:38) என்பது போன்று தெளிவாக இருந்தாலும், ஒரு சில கிறிஸ்தவர்கள் இதை நேரடிப்பொருளில் எடுத்துக்கொண்டு, கிறிஸ்தவ வாழ்விற்கு இது ஒரு அத்தியாவசியத்தேவை என்பது போல் நினைக்கின்றனர். முதல் நூற்றாண்டில் சமூக வாழ்வில் ஆளுகை செய்த சமூகப் பழக்க வழக்கங்களை மனதில் கொண்டு, "அன்பின் முத்தத்தோடே" என்ற கட்டளையை நீக்கிப்போடுதலே பொதுவான வழக்கமாக உள்ளது. "அன்பின் முத்தத்தோடே" என்பதற்குப் பதிலாக, சாதாரண வாழ்த்தான, கை குலுக்குதல் போன்ற பழக்கங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும் என்பதே பலருக்கு மனநிறைவு அளிக்கும் விஷயமாக உள்ளது. இதமான வாழ்த்து என்பதே முக்கியமான விஷயம் என்பதைப் பகுத்தறிய வேண்டும்.

இந்தப் பகுத்தறிதல் கருத்தை ஏற்படுத்துகிறது, ஆனால் ஒரு பிரச்சனையை அறிமுகப்படுத்துகிறது. புதிய ஏற்பாட்டில் கொடுக்கப்பட்ட கட்டளைக்குக் கிறிஸ்தவர்கள் தங்கள் சொந்த சமூகப்பழக்கங்களை வைத்துக்கொள்ளலாம் என்ற கொள்கை தழுவிக் கொள்ளப்பட்டபின்பு, அந்த கொள்கை எவ்வளவு தூரத்திற்கு நடைமுறைப்படும்? இந்தப் கேள்வி சிக்கலானது மற்றும் இதை இங்கு முழுமையாக விவாதிக்க இயலாது. இருப்பினும், வேதாகமத்தின் ஒவ்வொரு கட்டளையும், நவீன கிறிஸ்தவ வாழ்வின் தகுதியின்றி அப்படியே நடைமுறைப்படுத்தப்பட இயலாது என்பது தெளிவு. வேதாகமத்தில் உள்ள சில கட்டளைகள் உலகளாவியவையாகவும் அவைகள் தரப்பட்ட காலத்தில் இருந்த சமூகத்தின் சந்தர்ப்பப் பொருளின் செயல்விளைவு அவற்றில் கொஞ்சமே உள்ளன. மற்ற கட்டளைகள் அவைகள் தரப்பட்ட கலாச்சாரத்துடன் நெருங்கிப் பிணைக்கப்பட்டுள்ளன. குறிப்பிட்ட பழக்கவழக்கங்களில் வெளிப்பாட்டைக் காணுதலை ஒரு கொள்கையாகச் சில கட்டளைகள் கொண்டுள்ளன. குறிப்பிட்ட பழக்கவழக்கங்கள் மாறுபடலாம். ஒரு கை குலுக்குதல் அல்லது "அன்பின் முத்தம்" என்பது விசுவாசிகள் ஒருவர் மற்றவர் மீது கொண்டுள்ள மதிப்பையும் பிரியத்தையும் வெளிப்படுத்துகிறது.

அப்போஸ்தலரின் கடைசி வார்த்தைகள் பண்பான ஆசீர்வாதமாக உள்ளன. **கிறிஸ்து இயேசுவுக்குள்ளான உங்கள் அனைவருக்கும் சமாதானமுண்டாவதாக.** என்று அவர் எழுதினார். பேதுருவும் அவரது வாசகர்களும் "கிறிஸ்துவுக்குள்" இருந்தனர் என்பது அவர்களுக்கு மிகவும் மதிப்புள்ள விஷயமாக இருந்தது. "கிறிஸ்துவுக்குள்" இருத்தல் என்பது அவரது மக்கள் சமூகத்தின் பகுதியாக இருத்தல் என்பதாகும்; அது அவரது சபையின் உறுப்பினராக இருத்தல் என்பதாகும். அது மீட்டுக்கொள்ளப்பட்டதாக இருந்தது, ஆட்டுக்குட்டியானவரின் இரத்தத்தினால் ஒருவரின் பாவங்கள்

எடுத்துப்போடப்பட்டது. பேதுருவின் நம்பிக்கையையும் அவரது விசுவாசத்தையும் பகிர்ந்து கொண்டவர்களுக்கு **“சமாதானமுண்டாவதாக”** என்று அவர் வாழ்த்தினார், இது நன்றாக இருத்தல், நல்ல ஆரோக்கியம் மற்றும் ஒருவர் தமது அயலகத்தவருடன் இசைவிணக்கமாயிருத்தல் ஆகியவற்றைக் குறிக்கிறது. அவர்களும் அவரும் இந்த உலகம் தங்களுக்கு என்ன துன்பத்தை அளித்தாலும் அவற்றின் ஊடே கடந்து வந்து கிறிஸ்துவின் மகிமையான வெளிப்படுதலின் இளைப்பாறுதலைக் காண்பார்கள்.

---

***குறிப்புகள்:***

[1]NIV வேதாகமம், வேறுபாடு ஒன்றைத் தக்கவைக்கச் சந்தர்ப்பப்பொருள் ரீதி யான காரணம் ஏதேனும் இல்லாதபட்சத்தில், வேதாகமப் பாத்திரங்களின் பெயருக்கு ஒரே எழுத்துக்குறிப்பை மாத்திரம் பயன்படுத்துதல் என்ற நடைமுறையைத் தழுவியுள்ளது. இவ்வாறாக, எபிரெய மொழியில் இருந்து ஒலி மாற்றம் செய்யப்பட்ட பெயர்களும் கிரேக்க மொழியில் இருந்து ஒலிமாற்றம் செய்யப்பட்ட பெயர்களும் ஒரேவிதமாகவே உச்சரிக்கப்பட்டன. மற்றும் பல்வகைப் பெயர்களைக் கொண்ட பாத்திரங்கள், [உதாரணமாக கேபா, பேதுரு சீமோன்] பெரும்பாலும் ஒரே பெயரைக் கொண்டே குறிப்பிடப்பட்டன, இது அவர்களை ஆங்கில வாசகர்கள் சுலபமாக அடையாளம் கண்டுகொள்ளப் பயன்பட்டது. [2]Wayne A. Grudem, *The First Epistle of Peter: An Introduction and Commentary,* Tyndale New Testament Commentaries, vol. 17 (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1988), 23–24. [3] Ibid., 25–31.




**ஆசியா மைனர் பகுதியில் 1 பேதுரு நிருபம் சுற்றுக்கு விடப்படுதல்**